STC.No.108/2022
PW .1
நாள்.31.07.2023
பெயர்: சாலை மேதினி
த/பெ :சாலை தனராஜ்
வயது :26
ஊர்:அன்னவாசல்
தொழில்: வழக்கறிஞர்

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி :–</u>**

நீங்கள் கொடுத்ததாக சொல்லும் காசோலைத் தொகை வருமான வரிக்கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரியின் பெயரில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று உங்களுக்குத்தெரியாது என்றால் சரிதான். எதிரியின் மனைவியின் பெயர் என்ன என்றால் சாலை ஆதிமங்கை ஆகும். எதிரியின் மனைவியின் பெயரில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்பது குறித்து உங்களுக்குத் தெரியாது என்றால் சரிதான். எதிரியின் மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் ஆசிரியை ஆக பணிபுரிகிறார்.

எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்ற விவரம் உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் சேர்த்து வைத்திருந்ததாக சொல்லக்கூடிய தொகைக்கு கணக்கு எழுதிவைத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உண்மையில் உங்கள் பணத்தை சேமித்துவைத்திருந்தால், வங்கிக் கணக்கில் தான் சேமித்து வைத்திருக்க முடியும் என்றால் சரியல்ல.

நீங்கள் இதுநாள் வரை எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளீர்கள் என்றால் எதிரிக்கு மட்டும் தான் கடன் கொடுத்துள்ளேன். நீங்கள் பைனான்ஸ் தொழில் எதுவும் செய்துவருகிறீர்களா என்றால் இல்லை. நீங்கள் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள வங்கிக் கணக்கின் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

உங்கள் தந்தை என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். உங்கள் உடன்பிறந்த நபர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கச்சி உள்ளார். உங்கள் அண்ணன் என்ன செய்துக்கொண்டிருக்கிறார் என்றால் படித்துக்கொண்டிருக்கிறார். எதிரியை எத்தனை வருடங்களுக்கு முன்பாக உங்களுக்குத் தெரியும் என்றால் 4,5 வருடங்களுக்கு முன்பாக எனக்குத்

தெரியும். எதிரியும், நீங்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

உங்களுக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால் 26 வயதாகிறது. நீங்கள் சேர்த்து வைத்ததாக சொல்லும் பணத்தை பெற்றோர்களிடம் நீங்கள் கொடுத்து வைக்கவில்லையா என்றால் என்னுடைய உயர் படிப்பிற்காக நான் வைத்திருந்ததால், அந்த காசோலைப் பணத்தை நானே வைத்திருந்தேன். தற்பொழுது நீங்கள் என்ன மேற்படிப்பு படித்து வருகிறீர்கள் என்றால் நான் படிக்கவில்லை.

உங்கள் தந்தையும், எதிரியும் நண்பர்கள் என்றால் சரிதான். எதிரி திருச்சி, காட்டுரில் ஆன்மிகா டிரேடர்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வரும் விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. எதிரி அவருடைய தொழில் விருத்திக்காக கடந்த 2019 ஆம் வருடம் உங்கள் தந்தையிடம் ரூபாய் ஐந்து இலட்சம் கடன் பெற்றிருந்தார் என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. மேற்சொன்ன ஐந்து இலட்சமும், அதற்கான வட்டித்தொகையும் சேர்த்து, உங்களது தந்தை வங்கிக்கணக்கிலும், உங்கள் அண்ணன் வங்கிக் கணக்கிலும், உங்கள் வங்கிக் கணக்கிலும் மொத்தமாக ரூபாய் எட்டு இலட்சத்தை 2019 லிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்கள் வரை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பாவிடம் கைமாற்றாக வாங்கிய கடன்களை சிலசமயம் என்னுடைய வங்கி கணக்கில் எதிரி செலுத்துவது வழக்கம்.

உங்கள் அப்பாவையும், உங்கள் அண்ணனையும் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உங்கள் தந்தையிடம் வாங்கிய கடனை செலுத்தியதற்கான அனைத்து ஆவணங்களும், எதிரியிடம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி உங்கள் தந்தையிடம் வாங்கிய கடனை முழுவதும் செலுத்திவிட்டார் என்றும், எதிரியிடம் அதிக வட்டி கேட்டு, எதிரி உங்கள் தந்தைக்கு அந்த பணத்தை கொடுக்காததால், உங்கள் தந்தையிடம் எதிரி கொடுத்த வைத்திருந்த பூர்த்தி செய்யப்படாத காசோலையை நீங்கள் வழக்கறிஞர் என்பதால் உங்கள் மூலமாக எதிரி கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

எதிரி உங்களிடத்தில் எந்த பணமும் வாங்கியதில்லை என்றும், அதற்காக இந்த வழக்கின் காசோலை உங்களிடம் கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் எதிரிக்கு காசோலையில் உள்ள தொகையைக் கொடுத்திருந்தால், தகுந்த சாட்சிகளை வைத்து

பணத்தைக் கொடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

//sd/–சாலை மேதினி,
PW1.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் அவர்கள்.